**செய்தி வெளியீடு எண்: 573** **நாள்: 25.08.2018**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (25.8.2018) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தில் நேரடி நியமனம் மூலம் 20 முதுநிலை அலுவலர் (தொழில்நுட்பம்) மற்றும் 17 முதுநிலை அலுவலர் (நிதி), என மொத்தம் 37 பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 பேர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் 1949–ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. இக்கழகம், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், குறிப்பாக முதல் தலைமுறை தொழில் முனைவோர்கள் மற்றும் பெரிய நிறுவனங்களுக்கு கடனுதவி வழங்கி வருகிறது. மாநிலத்தில் 6 மண்டல அலுவலகங்கள், 25 கிளை அலுவலகங்கள் மற்றும் 6 கள அலுவலகங்கள் வாயிலாக இக்கழகம் தொழில் முனைவோரின் தேவைகளை பூர்த்தி செய்து வருகின்றது.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் பணிகளை தடையின்றி செயல்படுத்திடவும், தொழில் முனைவோருக்கு வழங்கும் சேவையினை மேம்படுத்திடவும், இக்கழகத்தில் காலியாகவுள்ள முதுநிலை அலுவலர் (நிதி) மற்றும் முதுநிலை அலுவலர் (தொழில்நுட்பம்) பணியிடங்களுக்கு நேரடி நியமனம் மூலம் நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, 20 முதுநிலை அலுவலர் (தொழில்நுட்பம்) மற்றும் 17 முதுநிலை அலுவலர் (நிதி) பணியிடங்களுக்கு பணியாளர்கள் நேரடி நியமனம் மூலம் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று 5 பேர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு.எம்.சி. சம்பத், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தொழில்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் எம். ஆர்த்தி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9
நாள்: 25.8.2018